## உங்களுடைய விருப்பத்திற்கு எதிராக உங்களுக்குத் திருமணம் முடித்துக் கொடுத்து விடுவார்கள் என்று பயமாகவுள்ளதா?

## நீங்கள் உங்களுடைய வருங்கால வாழ்க்கையை யாருடன் வாழவேண்டும் என்று முடிவெடுக்கும் உரிமை உங்களுக்குத்தான் உள்ளது. ஆகவே நீங்கள் உங்களுடைய பிரச்சனைகளுடன் தனியாக நிற்காதீர்கள்!

## கட்டாயத்திருமணம் என்றால் என்ன?

கட்டாயத்திருமணம் என்பது ஒரு ஆணுக்கோ அல்லது பெண்ணுக்கோ தனது திருமணத்தை நிராகரிப்பதற்கான சந்தர்ப்பம் கொடுக்கப்படாமற் போவதேயாகும். இதில் சம்மந்தப்பட்டவர்களின் தனிப்பட்ட விருப்பங்கள் மாத்திரம்தான் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

## கட்டாயத்திருமணமானது மனித உரிமைகளை மீறுகின்ற செயலாகும்.

ஒரு திருமணமானது சுதந்திரமாகவும், எதிர்காலத் தம்பதியினரின் முழுமையான சம்மதத்துடனும் மட்டுமேதான் நடைபெறவேண்டும். (1948 ஆம் ஆண்டு மனிதஉரிமைச்சட்டத்தின்படி பந்தி 16, வசனம் 2)

## கட்டாயத்திருமணமானது சட்டத்தின்படி தடை செய்யப்பட்டுள்ளது.

சுவிசில் திருமணம் செய்யும்போது சகலருக்கும் சொந்தமாக முடிவெடுப்பதற்கு உரிமையுண்டு. எவரையுமே வற்புறுத்தலாகாது, இல்லையெனில் 5 வருடங்கள் வரைக்குமான சிறைத்தண்டனை அச்சுறுத்தலுடன் திருமணம் வேறுநாட்டில் நடந்திருந்தாலும் அது செல்லுபடியாகாத ஒன்றாகக் கருதப்படும்.

## இதற்கான வழிமுறைகள்

உங்களுக்கு உதவி செய்யக் கூடியவர்களும், உங்களுடைய நிலைப்பாட்டைத் தெரிந்தவர்களும் மற்றும் உங்களுடைய பிரச்சனையின் பின்னணியை விளங்கிக்கொள்ளக் கூடியவர்களும் இங்குள்ளார்கள்.

வாழ்க்கையிலுண்டாகும் சிக்கலான சந்தர்ப்பங்களுக்கு ஆலோசனை வழங்குவதில் அனுபவம்வாய்ந்தவர்கள் பலதரப்பட்ட ஆலோசனை வழங்கும் நிலையங்களில் உள்ளார்கள். இவர்கள் உங்களது வழிமுறைகள் நீங்களே உங்களது கையில் எடுத்துக்கொள்வதற்கும், நீங்களே சுயமாகத் தீர்மானித்து எடுக்கும் அடுத்த கட்ட நடவடிக்கை எதுவென்பதை கண்டறிவதற்கும் உதவுவார்கள்.

தனிப்பட்ட முடிவுகளைச் சுயமாக எடுத்துக்கொள்வதற்கான உரிமை உங்களுக்குள்ளது. நீங்கள் உதவிகளைப் பெற்றுக்கொண்டு உங்களுடைய விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

## அவசர தேவைக்கான தொலைபேசி அழைப்பு



காவற்துறை 117

பாசல் மகளிரில்லம்
(Frauenhaus Basel)
தொலைபேசி இல: 061 681 66 33
(18 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான 24 மணி நேரச்சேவை)

2014

## ஆலோசனைக்கான சேவைகள்

**www.zwangsheirat.ch**
ஆரம்பத்தில் மின்னஞ்சல் மூலமாகவும் தொடர்ந்து தொலைபேசி மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம். ஆலோசனை விடயங்கள் அனைத்தும் இரகசியமாகப் பேணப்படும்.

இரு பாசல் மாநிலத்தில் பாதிக்கப்பட்டோருக்கான உதவி வழங்கும் அமைப்பு. (Opferhilfe beider Basel)
தொலைபேசி இல: 061 552 59 30
பாசல், பாசல்லாணடுக்கான பாதிப்புற்றோருக்கான நிலையத்தின் ஆலோசனை இலவசமானது. விரும்பின் பெயர் விபரங்கள் வெளியிடப்படாது பாதுகாத்துக் கொள்ளப்படும். அனுபவம் வாய்ந்த தொழிலாளர்கள் இரகசியத்தைக் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

JuAr இளையோருக்கான ஆலோசனைகள் (JuAr Jugendberatung)
தொலைபேசி இல: 061 683 08 / 882
தொலைபேசிமூல உரையாடல் நேரம்: புதன்கிழமை: 14.00 முதல் 16.00 மணிவரை.
JuAr எனும் இளம் வயதினருக்கான ஆலோசனை நிலையம் இளம்வயதினருக்கு மற்றும் அவர்களது வயதில் வரும் வினாப் போராட்டங்களுக்கும், பிரச்சினைகளுக்கும் உதவிகளை வழங்குகிறது

## ஆலோசனைக்கான சேவைகள்

அவசர நிலைப்பாட்டில் உள்ள 18 வயதிற்குட்பட்ட இளம் ஆண், பெண்களுக்கான தகவல், ஆலோசனை மற்றும் உதவிகள் பெறும் இடங்கள்

- குழந்தைகள், இளையோர் காப்பு நிலையம், பாசல் லான்ட் (Fachstelle Kindes- und Jugendschutz Basel-Landschaft)
  தொலைபேசி இல: 061 552 59 30
- குழந்தைகள் மற்றும் இளம்வயதினருக்கான பாசல்நகரச்சேவை நிலையம் (Kinder- und Jugenddienst Basel-Stadt)
  தொலைபேசி இல: 061 267 45 55

வெளிநாட்டவர்களுக்கான சேவைநிலையம்
(Ausländerdienst Baselland ald)
தொலைபேசி இல: 061 827 99 10
ஆரம்ப உரையாடலுக்கு நீங்கள் முழுநம்பிக்கையுடன் எங்களை நாடலாம்.

வெளிநாட்டவர்களுக்கான ஆலோசனை வழங்கும் நிலையம்
(GGG Ausländerberatung)
தொலைபேசி இல: 061 206 92 22
இரண்டு கலாச்சாரங்களிலும் அனுபவமுள்ள, தரம் வாய்ந்த ஆலோசனையாளர்களுடன் உரையாடுதல்.

## நூல்வெளியீடு

GGG Ausländerberatung

ald Ausländerdienst Baselland

SICHERHEITSDIREKTION
BASEL-LANDSCHAFT
Fachbereich Integration

Kanton Basel-Stadt
- Fachstelle Diversität und Integration
- Fachstelle Häusliche Gewalt

Unterstützt durch:

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

ERNST GÖHNER STIFTUNG

JACQUELINE SPENGLER STIFTUNG

வடிவமைப்பு: indigo-design.ch

இந்த அமைப்பு இதற்கு அனுமதி வழங்கியுள்ளது.
Service de la Cohésion Multiculturelle Neuchâtel (COSM)

Tamilisch




திருமணம் செய்வதா!
யாரை எப்பொழுது செய்வது என்று நீங்கள்தான் அதை முடிவு செய்தல் வேண்டும்.